சைவ வித்தியாசாலைகளில் உபயோகிக்க வேண்டியவை
சபையார் பால பாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களை ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெங்தை யினையடி நீழலே.

வாரோத வருஷம் (1889) ஆவணிமாதம் 28-உ திகதி ஆரம்பமாது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ஷ புரட்டாதிமீ அ௨ (1942 செப்ரம்பர் 24 வியாழக்கிழமை) [இலக்கம் ௪௬

திருக்கோவையாரின் உவமைச் சிறப்புக்கள்

[இது சென்ற 12.—13-9-42 ஆகிய இருநாட்களிலும் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நிகழ்த்தப்பட்ட திருக்கோவையார் விரிவுரை மகாநாட்டில் இப்பத்திரிகையின் துணையாசிரியர் திரு. ந. சி. நடராஜன் அவர்கள் நிகழ்த்திய விரிவுரையின் சுருக்கம்.]

(முற்றொடர்)

4. இனி, உடன்போக்கில், தலைவி தலைவனோடு உடன்போய் விட்டாள். அவள் நற்றாய் அவளை கற்புத்திறன் கண்டு அகத்துள் மழிழவெய்தினளாயினும், "என்மகள் தன் தோழியைவிட்டு, என்னையும் முன்னே துறந்து, சோதாரர் முன்னே வர் அவர் நாற்ற அருஞ்சுரம் போயினளே, நான் இனி எங்ஙனம் ஆற்றுவேன்" என்று வருந்தினாள். பின், அவளது நிலையைக் கண்டு "இக் கிளியையும் விட்டுச் சென்றாளே, ஆகிய, "என் அன்னை போயினள்; அவள் யாண்டையளோ அறியேனே; இனி, என்னைப் பருந்து அடுமே" என்று கூறுகின்றதே. அதுவும் என் நெஞ்சை நார கிலந்தரை என்று சோகின்றாள். பகலவனைப் பார்க்கின்றாள், கொடிய பாலையை நினைக்கின்றாள். "பரவம்! என் குழந்தை கொடிய வெயிலில் கடிய சுரத்தைக் கடந்து எப்படித்தான் நடந்து செல்லும். ஏ! கதிரவனே! அவளுடைய முகந்தாமரை வாட்டாமல், தாமரை மலர்போல, மலர்ந்துவாவாக" என்று வேண்டுகின்றாள். தாயல்லவா? தலைவியின் பருவத்தை நினைக்கின்றாள். "என் மகள் பன்னீராண்டு தானும் நிரம்பப்பெறாத சிறுபாயிற்றே. அவளுக்குப் பக்கத்திலே கற்பிக்கும் முது பெண்டுமில்லையே. தலைவனுக்குச் செய்ய வேண்டிய குற்றேவல் அவள் எவ்வாறு அறிந்து செய்ய வல்லள்" என்று கவல்கின்றாள். அங்ஙனம் கவல்கின்றவள் மகளின் மீது சென்றும் பெரிய காதலினாலே சொல்லுஞ் சொற்களும் உவமையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுந் தரத்தன.

வைம்மலர் வாட்படை யூழற்குச் செய்யுங்கும் றேவல்மற்றென்
மைந்மலர் வாட்கண்ணி வல்லள்கொல் லாக்கில்லை யான்மலைவாய்
பொய்ம்மலர்க்காந்தள்ப்பொற்றாதுகொண்டுநின்றாள்கொல்லோ
கைம்மல ராற்கண் புதைத்துப் பதைக்குமெங் காரமுமே.

(செய் 223)

இப்பாட்டில், பிரிவினால் மகள்மேற் செல்லுங் காதல்தோன்ற "என்வாட்கண்ணி" என்றும், "எங்கார்மயில்' என்றும் பலகால் தன்னோடுத்து நற்றாய் கூறுவது தன்மைவிற்சிச் கவை பெரிதும் பொருந்தி விளங்குகின்றது. அதுபட்டோ, கார்மயில் என்று நீலியை உருவகித்தவள் பறவையினத்தைச் சேர்த்த மயிலல்ல அவள் என்பதையுஞ் சுட்டாமற் சுட்டுவதுபோல, "மொய்ம்மலர்க் காந்தளிட் பார்த்தொன் றெண்ணித் துண்ணென் றெரிந்துக் கிகமவாறாற் கண்புதைத்துப் பதைக்கும் எங்கார்மயிலே" என்ற கூறுவதும், அங்ஙனங் கூறுமாற்றால் அவளது பருவத்தைக் குறிப்பிப்பதும் எத்துணை அழகு பயக்கின்றது பாருங்கள்! இது "சோகென்னும் அங்கிகாரமாய்ப் பாம்பிற் கஞ்ச மயிலெனை இலகுணமடுத்து வந்த தென்பாருமுளர்" என்று உரையார் கூறுதலும் சேர்த்தற் தக்கது. இச் செய்யுளில் வரும் சொல்லடுக்கையும் பொருட்பேற்றையும் கவிச்சக்கரவர்த்தி எனப்படும் கம்பரும் சொன்னேபோற் போற்றித் தாமியற்றிய செய்யுளின் கண்ணே அமைத்திருத்லைக் காணலாம். வனம்புகு படலத்தில் ஸ்ரீராமன் சேதக்கு இயற்கை வனப்புக்களைக் காட்டிச் செல்லும் பகுதியுள்ள பேக்காணுஞ் செய்யுளுக்கும் இத்திருக்கோவையார்ச் செய்யுளுக்கும் எத்துணை ஒற்றுமை இருக்கின்றதென்று பாருங்கள்:-

"எங்கின முண்யாளை வெழுதரு மெழிலாளை
காந்தளி முகைகண்மிற் கண்டொரு கனிர்க்கு
பாந்தளி னெழுங்கிக் கவிய படிபாரத்
தேந்தல வுகள்செய்யுஞ் செறுறு ககைகாணுய"

இனி, பகற்குறியிலே இற்செறிவகித்து வரைவுகடாதல் என்னும் கிளவிக்குரிய செய்யுளை சோக்குவோமாக. குறிஞ்சி நிலத் தலைவிக்கும் வேறொருவனுக்குமிடையே களவாக நிகழ்ந்த காதலொழுக்கத்தை அவள்தாய் அவளை உற்றுநோக்கு முகத்தால் உணர்ந்து கொண்டாள். உணர்ந்து, "இனி நீ அம்பலத்தான் நிருமலைக்கு வினையாடப் போகற்க" என்று அவளைத் தடுத்துவிட்டாள். இதைஉற்ற தோழி தலைவனுக்கு இச் செய்தியைத் தெரிவித்து "இனி நீ காலந்தாழ்த்ததுதல் கூடாது. அவளை விரைவில் மணஞ்செய்துகொள்ளுதல் வேண்டும்" என்று அவனுக்குக் குறிப்பாக உணர்த்துமுறையில் இச்செய்யுள் யாக்கப்பட்டிருக்கின்றது. செய்யுளைப் படிப்போமாக.

ஈனின வாட நறனின(வு) ஓர்ந்தொர் மாகவியற்றம்
வேய்கின வாடுவெற் பாடுற்ற கோக்கொம் பெல்லியகம்
போய்கின வாடலாள் குன்றவிலை அம்பலத் தாடுபுத்தேள்
நீகின வாடநீ றேகின வாடி நிருமலைக்கே

(செய். 133)

இதில், தோழி முதலில் தலைவனை விளிக்கும்போதே, "வெறபர!" என்று விளிக்கின்றாள். அதனால், அவனும்தரு குறிஞ்சி நிலத்தலைவன் என்பது பெறப்பட்டது. அங்ஙனம் விளிக்கும்போது அவனது மலையினிடத்தே தேனீக்கள் கட்டிய தேன்கூட்டில் தேன் நிரம்பியிட்டமையை யுணர்ந்து செங்குத்தான அவ்வரையின் உச்சியின் ஒரு பக்கத்தே தூங்கும் அத்தேன்கூட்டை எடுத்தற்காகத் தன் இளந்தலைவரான குன்றவர் மகளியற்றுதலை நான் கூறுகின்றாள். மரம்பு எனினும் கணணெனினும் ஒக்கும். நீண்ட ஒரு பச்சைமூங்கிலை வெட்டி அதன் கணுக்களுள்ள இடங்களை ஒருசாணவளர விட்டு நறுக்கி அமைப்பதே கண்ணெனி. (வேட்டுவர் அரிண மலையோடு சாரதிவிட்டு அதன்கீழுள்ள காலவைத்தேறி ஏற மலையின் செங்குத்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

அரேபியர் வான சாஸ்திரம்

Arabic Astronomy

அரேபியர்கள் அலெக்ஸாண்டிரியா (Alexandria) வை 1453-ல் கைப்பற்றி அங்கிருந்த அரிய நூல் நிலையத்தை அழித்த பின்னர்த் தாமும் கலை வளர்ச்சியில் அதிகம் வல்லமையுடையவராயினர். அலெக்ஸாண்டிரியா கைப்பற்றப்பட்டதல் அங்கிருந்த நத்துவநூலறிஞர் கொன்ஸ்டாண்டிநோப்பிள் (Constantinople) என்னுமிடத்திற்குச் சென்றனர். அவ்விடத்தே தமக்கேவிருத்தி செய்வராயினர். அரேபியர் கிரேக்க முதலிய முதலிய இடங்கட்குச் சென்று கணிதம், விஞ்ஞானம் ஆகிய கலைகளைக்கற்க ஆரம்பித்தனர். யூக்லிட் (Euclid), ஆர்கிமிடீஸ் (Archimedes), ரோலமி (Psolomey) ஆகியோரின் நூல்களை மொழிபெயர்த்தனர். இந்தியாவுக்குச் சென்று வானசாஸ்திரம், கணிதம் என்பவற்றையுங் கற்றனர். சாளிமேன் (Charlemgne) சக்கரவர்த்தியின் ஒரே காலத்தவரான கலிப் அம்மம் (Caliph Almum). என்பவர் வானசாஸ்திர வளர்ச்சியில் அதிகம் ஊக்கமுடையவராயினர்.

ரார்ரறற்(Tartery) தேசத்து மன்னவரான உலுபெக் (Ulubek) என்பவரும் வானசாஸ்திரம் கற்பதில் மிக்கவுக்கம் கொண்டிருந்தார். தன் ராஜ்யத்திற்கு தலைநகரமான ஸமாக்கண்ட் (Samarkand) என்ற விடத்தில் 1449-ல் ஒரு பெரிய வேதசாலையையும், வரிகசாலையையும், படைசாலையையும் அமைத்தார். இவ்வேதசாலையில் அமைக்கப்பட்ட தரிய யந்திரமானது 180 அடியுமுடையதாகும். இதன் உதவியால் ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களை நன்கு ஆராய்ந்த பின்னர் ஓர் நட்சத்திர அட்டவணை(பட்டிகை) யைப்பிரசுரஞ்செய்தார். இதுமல்லாம் சுந்தமுடையதும் ரைக்கோ-பிரஹ (Tychs-Brahi 1546) என்பவரது நட்சத்திர அட்டவணையினின்றும் பெரும்பாலும் வேறுபடாததுமாகும். அரேபியர்களுடைய மதநூலிலும் (Koran) இதைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு வளர்ச்சி படைந்து வந்த வானசாஸ்திரமானது கி. பி. 140 ம ஆண்டினபின் 1400 வருடங்களாக எவ்வித வளர்ச்சியுமடையா திருக்கலாயிற்று. அதன் பின்னர் ஏறபட்ட வளர்ச்சிக்கு அதாவது நற்சால வானசாஸ்திரமானது (Modern Astronomy) வளர்ச்சிக்குக் கர்த்தாக்களாகக் கொள்ளப்படுவர்கள் கொப்பர்னிக்கஸ் (Copernicus 1473-1543), ரைக்கோ-ற்றிஹி (Tycho Brahi 1546-1601), கெப்லர் (Kepler 1571-1630), கலிலியோ (Galilio 1564-1642), நியூட்டன் (Neuton 1642-1727) ஆவர். இவர்களுள் கலிலியோ என்பவரே ஆதிகர்த்தர் எனப்படுவர். இவரால் வலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட தூரதரிசனி (Telescope) யும், மற்றையோரால் பிரறறப்பட்ட கோணதூரமானி (Sextant), சூரியபிமானி, (Heliameter), ஒளிநிறமானி (Spectroscope), நிழலைபிரமாணமானி (Photo Meter) (Radio-Meter) ஆகிய யந்திரங்களும் பற்பல இடங்களில் அமைக்கப்பட்ட வேதசாலைகளுமே பிற்கால வளர்ச்சிக்கு அளவிறந்த துணைபுரிந்தன. இனித் தற்கால வானநூல் வல்லுனர்களைப் பற்றிக் கூறுவாம்.

சிவஞானபோத விரிவுரை

[இது குலசேகரன் பட்டினம் "திருவள்ளுவரகம்" திரு. ப. இராமகாதபிள்ளை யவர்கள் யாழ்ப்பாணம் கலா நிலையத்தில் தொடர்பாக நிகழ்த்திய விரிவுரையின் சாரம்:]

(14-9-42-ல் வெளிவந்ததின் தொடர்ச்சி)

மங்கலவாழ்த்து

கல்லா விழன்மலை
வில்லா ருளரிய
பொல்லா நினைமலர்
நல்லார் புனைவரே.

மங்கலவாழ்த்து, வாழ்த்தும், வணக்கமும், பொருளியல்புரைத்தலும் என மூவகைப்படும். அவற்றுள் இவ்வாழ்த்து, பொருளியல் புரைத்தல்.

இன்பொருள்:— திருவெள்ளிமலையில் (நக்கி பெருமானுக்கு) மனைவி இல்லாமல் செய்தருளிய தேன்முகம் பெல்லவர் அருளுதற் பொருட்டு (எல்லாருக்கும் எஞ்ஞான்றும் யாண்டும் கேரும் இடையூற்றை கீக்கியருளுதலால அல்லிடையூற்றுக்கும்) பொல்லார் என்னுக் திருப்பெயருடைய மூதறிவினையாரின் இரண்டு திருவடி மலர்களை, உண்மை நூலைக்கேட்டு, நினைந்து, தெளிந்த மெய்யன்பாகிய கலவார் தமது முடியிற் சூடுவர். இணைமலர் எனபது தானே விளங்கும் பிறவா இறவாப் பெருமையனாகிய முதல்வனின் அறிவு தொழில் என்னும் இரு பெரும் பண்புகளாம். அப்பண்புகளைச் சூடுதல் என்பது, விளர்க விளங்கும் ஆகியின அறிவு தொழில தானே விளங்கும் முதல்வன் அறிவு தொழிலகளுள் அடங்கி அவற்றின் வழி நிற்றல். பொல்லார் என்பதற்குத் தானே தோன்றிய கடவுள் எனவும் கூறுவர். இப்பொருளுக்குப் பொல்லார் தோன்றப்படாதவர்; பொள்ளல்—தோண்டல்; பொள்ளார் என்பது பொல்லர் என மரீஇய தெனக் கொள்க. மலைவில்லார் என்பதற்குப் பொன்மலையை வில்லாகவுடையவர் எனவுங் கூறுவர். தலைவர் ஆகியின் அறிவின் கண் மலைவு நீர்த்து "மலைவில்லார்" என ஏறபெயர் பெற்றமை போல அவர்தம் திருமகளார், ஆகியின் தொழிலின் கண் ஏறபடும் இடர் கடிந்து அவ்விடையூற்றுக்கும் பொல்லார் என ஏறபெயர் பெற்றனர். இங்ஙனம் இருவரும் மலையும் இடரும் அகற்றியமையால் மாசு தீர்ந்த ஆன்கள் கல்லார் என ஏறபெயர் பெற்றனர்.

கல்லார்—நல்லறிவுச் செல்வோர். நன்னெறி—திருவடியிற் கட்டுயிர்க்கும் மெய்நெறி, மெய்ம்மை—திருவடிஞானம். இதனால் கல்லாரை அடியாரெனவும் மறைகுமர், திருவடி நிறைவினுள் அடங்கிய செம்மையோர் சிவனியாகளின், அவரை, நாயன்மார் எனவும், வழங்குவர். இது, தந்தை தாயர் பெயர் குறித்து அவர்தம் மக்கள் எனவும், ஆசான் பெயர் குறித்து அவனறன் மாணுக்கரெனவும், அரசன் பெயர் குறித்து அவனறன் குடிகள் எனவும், தலைவன் பெயர் குறித்து அவனறன் மனைவி எனவும், நாட்டின் பெயர் குறித்து நாடன் எனவும், மொழியின் பெயர் குறித்து மொழியன்எனவும், குலத்தின் பெயர்குறித்துக் குடிமகன் எனவும் வழங்கிவரும் ஒருபுடை யொப்புமையான் உணர்க.

செந்தமிழ் ஓ மொழிப் பொருளும், பிள்ளையார் திருப்பிழம்பு, யானை முகத்தோடு ஒப்புமையுடைமையான் எக்காட்டினுஞ் சிறந்த தென்னாட்டவர் பிள்ளையார் திருவடி யினையானைத் திருமுகமாகக் கொண்டார். அவ்வன்மை செந்தமிழ் மறையாம் ஓதாதுணர்ந்து திருவருள உணர்வான் அனைத்துப் பொருளுங்கண்டு உலகுய்ய துணுடைய பிள்ளையார் பாடியருளிய திருவெழுத்து தமிழின் கண், "பிடியதன்" என்று தொடங்கும் திருப்பாட்டால் உணரலாம். மேலும் அத்திருப்பாட்டு "வழிமொழி இடர்கடி கணபதி" என்று அருளிச் செல்லாக இடர்கடிவதே அப்பிழம்பின் சிறப்புநன் என்பதும் விளங்குக.

பிழம்பு எனினும் உருவம் எனினும் ஒன்று. அத்திருப்பாட்டு வருமாறு:—

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்லலி வலமுறை யிறையே"

"குலலானிழல்" என்னும் மங்கலவாழ்த்துப் பாட்டு எல்லாம் பொருள் இயல்பு உரைக்கின்ற தென்பதை, மெய்கண்டார் நூற்பேருரைப் பேராசிரியர் அருளியவாற்ற இல்கு வரைகின்றேன். அது,

இப்பாட்டு வஞ்சித்துறை. இது கல் என்பது முதல் ஏ என்ப நிறவாய்ப் பன்னிருசொற்களாற் கூறிவை, இந்நூல் பன்னிரு சூத்திரத்தாற் செய்யப்பட்ட தெனவும், அவற்றுள் மும்மூன்று சொற்களு ஒவ்வோரடியாக வைத்த கல்கடியாகக் கூறுவை, இரண்டும் அவற்றுள் மும்மூன்று சூத்திரம் ஒன்றாகியவாக வைத்து நான்கிலவாற் செய்யப்பட்ட தெனவும், அவற்றுள் முன்னீரடியும் ஒரு வினை முடிபு பின்னீரடியும் பிறிதோர் வினை முடிபுமாக இருவகைப் படுத்துச் செய்யவே, முன்னுற சூத்திரமும் ஓர் இகாரமும் பின்னுற சூத்திரமும் வேறோரகாரமுமாக இறுதி இரண்டிகாரத்தாற் செயயப்பட்ட தெனவும் குறிப்பாணுணரதியவாற காண்க. இரண்டாம் ஓதியின் முதற் சூத்திரம் "இறையுமா" என முதலோரதின இறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறிவப்படுவ தென்பது உணர்த்துதற்கு மறிவு என்பதின் ஈறடியினுஞ் சாரவைத்தார்.

'கல்லானிழல்' என முதலடியின் இடைக்கூறிவை முதலோரத்துப் பிரமாணங் கூறவதெம்பதுடன், இரண்டாமடியில் "மலைவிலவாருளிய" எனச் செய்கை கூறிவை இரண்டாமோரது இலக்கணை கூறுவதென்றாதுடன், மூன்றுமடியிற "பொல்லாநினைமலர்" எனத் திருவடி கூறுவை மூன்றும் ஒருதுச் சாரவல் கூறுவதென்பதுடன்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

சிவப்பிரகாசர் கவி நய்ம்

திருமயிலை, திரு. சே. வே. ஐம்புலிங்கம்பிள்ளை

(முன் தொடர்ச்சி)

சோணசைல மாலை

(1) நடமிடு பசும்பொற் புரவிமேற் கொண்டு நவின
மென்மலர்க் காத்தெறிபூம்
படையொடு தாங்க வந்த மெண்விடயப்பகைப்
புலிதனை யெற்கிந்தியே.

குதிரைச் சேவகராகிய சிவபெருமான் ஆசியைச் சத்தாகி விடயங்களில் ஆழவிடாமற் றடுக்குப்படி வேண்டுகின்றார். சிவபெருமான் குதிரைச் சேவகராக வந்தது மாணிக்கவாசகர் பொருட்டு. அக் கதையை இங்கே குறிப்பிற்படுவாம்.

(2) "யாமுமா முமையுண் ணுமுல முண்பா லித்த
பாடச் செயா யெனினும்
மேயுமா லயச்செய் சூலிகோ யெனினும்
விடுத்துநிற் பரமோ நருளாய்"

திருஞானசம்பந்தருக்கு உமையம்மையார் பொற்கிண்ணத்தில் பாலூட்டிப் பாடச் செய்தபடியோல் எனக்கு அருள் புரியாவிட்டாலும் அப்பருக்குச் சூலநோய் உண்டாக்கி அவரைப் பாடச் செய்தது போலேனும் அருள் புரியக் கடவாய் என்று ஆசிரியர் வேண்டுகின்றார். அறக்கருணை மறக்கருணையை விளக்கியபடி.

(3) "தெருமரு மறிவி தமையகன் றிடாத தேவரைத்
தேவரென் றெண்ணி
அருமருந்தினய கிங்கடையாத அறிவிலார்
பலப்பினி யறுமோ"

"ஒறிலாதவ னீசனொருவனே" என்னும் தேவாரத்திற் கூறிய சிவபெருமானை வணங்கினால்தான் பிறப்பினி நீங்கும். மற்றைக் கொச்சைத் தேவரை வழிபடுவதினால் பிறவியறாது. வீழ்வார்க்கு வீழ்வார்தனை என்றவாறும்.

(4) "அருங்கலம் புனையு மகளிர்ச ரிருவ ரணிமணம்
புணர்த்திலா ணமுக்
துரக்கமும் புலவர்க் குதவுன் றனையே துதித்திடா
தழன்றனன் வறிதே"

கந்தமூர்த்தி நாயனுருக்குச் சிவபிரான் அருள்புரிந்தமையைக் கூறியது.

(5) "இழையெனத் தளர்சிற் றிடையுணுமுலை
யாளெனக்கு வண்புகலி வேந்கின்ற
கழுமணிப் பசுமபொற் குலயாற்றிணைக் கழுவு
நீர் வாய்ப்பதற் குவாயாய்"

திருஞான சம்பந்தருக்குப் பால் ஊட்டிய பொற்கிண்ணத்தைக் கழுவியேனும் எனக்கு நீர் வார்க்கும்படி அருள் சுரப்பாயாக என்று ஆசிரியர் இரங்கினார்.

(6) "மாக்குயின் மிழற்றும் காவலூர்ப் புலவன் மறப்பவு
முடிமிசை யிருத்தும்
பூக்கழு வடியேன் தலைமிசை யிருத்தப்
புகலிலு மென்கொலி பிரங்காய்"

கந்தமூர்த்தி நாயனுருக்குத் திருவதிகையில் சிவபெருமான் திருவடி தீக்ஷை செய்ததைக் குறிப்பித்தவாறும். அவர் வேண்டாமென்று மறப்பவும் வலியச் செய்த திருவடி தீக்ஷையை எனக்குச் செய்வாயாக என்று வேண்டியபடி.

(7) துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுகோய்
தொலைப்பினுந் தொலைத்திடா தரும்
பின்னடி மலரையன்றி யான்மறந்தும் பிணப்பனோ
இறக்கும் வானவரை"

"உன்னேன் பிறதெய்வ முன்னையல்லா தெங்கள் உத்தமனே" என்னும் திருவாசகத்தை இப்பாடல் நினைப்பூட்டுகின்றது.

(8) நீரினு லழலால் வருவொடும் பிணியால் நிருதரால்
அல்லகையால் விலங்காற்
சோராரால் வருந்து மவரல் லினது துயரமாம்
புகன்றிடுவர்.

சிவநாமத்தை உச்சரிப்போருக்கு ஒரு தீங்கும் வாராது என்பதாம்.

சிவசிவ என்கில் தீவினை யாவர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ எனைச் சிவகதி தானே.

என்னும் திருமந்திரத்தை நோக்கவும்.

(9) "தோறறிடும் பிறவியெனுங் கடல் வீழ்ந்து துயர்ப்பினி
யெனுமலை யெய்க்
கறிற்றுன் முதலி விழுங்குமுன் னினறு குரைகழற்
கரைபுக விடுப்பாய்"

பிறவியைக் கடலாகவும், துயரதை மலையாகவும், யமனை முதலையாகவும் சிவனடியைக் கரையாகவும் உருவகித்திருப்பது சாலவும் அழகுடைத்து.

(10) "ஒடுதுன் மருங்குலமாதர் மேல்வைத்த தூதுவுன்
பதாம்புயத்தி
லெய்யாற நறமென் கலவையின் விருப்பு வெண்டிரு
நீறறிவுமா வருமோ"

தத்தனதயல்லையார் தங்கள்மேல் வைத்த தயவை அரசரிடம் கூறிட்டு அதனிலங்கொருக்கு மணகை வைத்தவருக் கமருகளிக்கு நின்பெருமை என்னுக் திருவிளையாடல் இங்கே சிந்திக்கத் தக்கது.

(11) மாணமும் பிறவித்துயரு நீங்குமுறுவி
வாயச் சிலம்பிக் கருளுபுரிந்த
கருணியெனுமுனைவந் தடைந்தனன் இனி நின்
கருதலிலு மினகென் றறியேன்"

சிலம்பிக்கருள்புரிந்த கதையைக் குறிப்பித்தருள்வார் ஆசிரியர். சேரர் செங்கட் சோழர் சரித்திரம் பார்க்க.

(12) அந்தரி யஞ்சலி கொளியம்பிகை
மனோன்மணி மதங்கி
சுந்தரியுமை புண்ணுமுலி யெனவிள
நலவியை வாழ்த்துமா றருளாய்

இப்பாடலால் சத்தியின்றிச் சிவமில்லை யென்பதை உணர்த்துகின்றார் ஆசிரியர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழுகண்புலல் வேந்தனுமோங்குக
நாழுக நீயுலகு லாமரனுமோங
சூழுக வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஷு
புரட்டாதி மீ அஉ வியாழக்கிழமை

வண்ணார்பண்ணைக் காகித நிலயம்

இவ் வண்ணார்பண்ணையி லுள்ள தயாக்கதோர் எனப் படும் காகித நிலயம், இங்கிலை மத்திலிருந்த ஒரேயொரு உதவியுத்தியோகத்தரையும் தவிர்த்து விட்ட பிறகு, இவ்குள்ள மக்கள் வசியோர்க்கரும்மும் ஆற்றமுடியாத ஈனநிலையில் இருக்கின்ற தெனலாம். இப்பொழுது குறித்த இந்த நிலயத்தில் ஒரேயொரு உதவியோகத்தர் மாத்திரம் இருந்துகொண்டு ஒய்வின்றிக் கடமை பார்த்து வருகிறார். நாள் தோறும் மத்தியானத்தில் 12½ மணி தொடக்கம் 1½ மணிவரையில் குறித்த உத்தியோகத்தர் போசனஞ் செய்யப் போகும் போது நிலயம் பூட்டப் படுகின்றது. இக்கக் காகித நிலயம் யாழ்ப்பாணப் பட்டினத்திலே இடைவிடாது பலவகையான சருகுகள் ஆற்றப்படும் வட்டார மத்தியிலே பெரிய கடைக்கு அணித்தாக விருக்கின்றது. பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் யந்திராசாலைகள் பத்திரிகை நிலயங்கள் வியாபார சமுதாயங்கள் முதலியவற்றாற் சூழப்பட்டுள்ள இத்தானம் நணபகலிலே ஊரவர்கள் வந்து சருகும் பார்க்க வேண்டிய கோத்திலே இப்படிப் பூட்டப்பட்டிருத்தல் இவ்குள்ளா ரெல்லாருக்கும் பெரும் வசதியினமாக இருக்குமென நாம் முன்னர் இப்பத்திரிகை வாயிலாக இரண்டொரு முறை பெடுத்த முறையிட்டுள்ளோம். நாம் மாத்திரமன்றி, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார், இவ்குள்ள வேறு சங்கத்தினராகியவர்களும் பிரதானமான இந்தக் கடித நிலயத்தில் வேலையிலுமுக உத்தி யோ கத் தரைக் குறைத்தத் தனியே ஒரு உத்தி யோகத்தருடன் கருமமற்றவிட்டால் ஊரவர்க்குப் பெரும் வசதியினங்கள் ஏற்படு மானதால் அப்படிச் செய்யவொணணுதென நிரணயங்களை நிறைவேற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். ஆனால் அவைகளொன்றும் பயன்பட்டில்லை; முறையிடுக செல்லாம் செவிடன் செவிவிழுகிய சங்கநாதம் போற் பயன்பட்டில. என்செயலாம்! நித்திரையாய்க் கிடப்பவனை விழித்தெழச் செய்ய முடியுமே யொழிய நித்திரைபோற் கிடப்பவனை விழித்தெழச் செய்தல் முடியுமா?

நாங்கள் அறிந்த வரையில் வண்ணார்பண்ணைக் காகிதநிலயத்தின் மாச வருவாய் 1500 வரையிலிருக்குமென்றும் செலவு ரூபா 500 வரையிலிருக்குமென்றும் ஆகிக்கக் கிடக்கின்றது. இந்த மதிப்பில் ஏதும் பிழைபிருந்தால் கடிதப் பகுதித் தலையர் இதன் கிட்டு ஆராய்ந்து நாம் மதித்த தொகையைத் திருந்தி வெளியிடுவாராக. இப்படிச் செலவைக் காட்டிலும் இருமடங்கு வருவாய் மாசந்தோறும் வரும் இத்தானபத்தில், இங்குள்ளார் குறித்த நேரம் முழுவதும், (அதாவது இடையிலே ஒருமணி நேரம் பூட்டப்படுதலின்றி, வந்து வந்து சருகும் ஆற்றுதற்காயிய வசதிகளை மேலதிகாரிகள் உடனே செய்தலவைக்க வொணணுதாரமதாகுமான மொத்திற பெருந்நுவானான மக்கள் இந்தக் கடிதத்தானத்தில் நின்று நம் சருகுத்தைக் காலதாமத மின்றிச் செய்து முடித்துவிட்டுப் போதற்கியலாத தயங்குவதை நாம் கேரிற் பார்த்துள்ளோம்; நிலயத் தலைவரும் "ஊருக்கென்றொரு தாரி ஆருக்கென்றுவாய்" என்ற நிலைமையில் நிற்கின்றாரே. முந்திமுன்று உதவி யுத்தியோகத்தரும் ஒரு தலைமையுத்தியோகத்தரும் இருந்து சருகும் பார்த்த இத்தானத்தில் இப்பொழுது "லோக்கல் அஸிஸ்ரன்ற்" என்று சொல்லப்படும் உள்ளூர் உதவி யுத்தியோகத்தரொருவரையாயினும் நாற்பது சாற்றுபதைக்கு ரூபா வேதனங் கொடுத்து நியமித்துவிட்டால் இந்தக் காகித நிலயம் இடைநேரத்தில் ஒருமணித்தியாலம் பூட்டப்படுதலின்றி எவரும் வந்து சருகும் பார்த்தற்கு வசதியானதானமாக விருக்குமே. 500 ரூபா செலவிற்கு 1000 ரூபா இலாபம் போதாதா? பொருள்வருவாய் அதிகமுள்ள தானத்திலே செலவுச் சுருக்கஞ் செய்து ஊரவர்களை இடர்ப்படுத்த வேண்டிய நியாயமில்லையே; காகித நிலயம் முதலிய பிரசித்த தானங்கள் இருப்பது ஊரவர்களின் வசதியை விட்டல்லாமல், இப்படியான தானங்களின் வசதியை விட்டு ஊரவர்கள் நடந்து கொள்ளுதல் முடியாதென்பதை மேலதிகாரிகளுக்கு விபத்துடன் தெரிவிக்கின்றோம். ஆதலால் வண்ணார்பண்ணைக் காகித நிலயத்தில் இப்பொழுது சேர்ந்திருக்கும் வசதிக் குறைவுகளை இன்றே அகற்றச் செய்யும்படி, காகிதப்பகுதித் தலையர், போக்குவரத்துப் பகுதி மந்திரியார், எங்கள் யாழ்ப்பாணப்பகுதிச் சனப் பிரதிநிதியாகவுள்ள மூவருக்கும் முறையிடுகின்றோம். அவர்கள் இம்முறையீட்டைச் திருத்த ஆகவேண்டியவற்றை விரைவிற் செய்வரென இங்குள்ள மக்கள் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள்.

ஐம்பது சத நாணயம்

இந்நாட்டில் கீழ்த்த காலமாக வெளிவந்த வெள்ளியாகிய ஐம்பது சத நாணயம் இந்த செப்டம்பர் மாசம் முப்நாந் தேதிவரையிற்றான் 50 சத வீல பெறுமென்றும் அதன்மேல் அந்த வீலக்கு மாற்றப்படுதலிற்றான் அதிவுளள வெள்ளி வீலயாகிய பத்துப் பதினைந்து சத வீலதான பெறமுடியுமென்றும் ஆனாலும் குறித்த வெள்ளி நாணயத்தை வைத்திருப்பேரேவரும் இந்தச் செப்டெம்பர் மாசம் முப்நாந்தேதிபிரவு 12 மணிக்குமுன் மாற்றக்கோள்வது புத்திமதியுமென்றும் நமது அரசினர் முந்தியே ஒரு சற்றுநிருபம் விடுத்துப் பத்திரிகைகள் வாயிலாக விளம்பரஞ் செய்துள்ளார்கள் என்றும் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். ஆனால் அவைகளொன்றும் பயன்பட்டில்லை; முறையிடுக செல்லாம் செவிடன் செவிவிழுகிய சங்கநாதம் போற் பயன்பட்டில. என்செயலாம்! நித்திரையாய்க் கிடப்பவனை விழித்தெழச் செய்ய முடியுமே யொழிய நித்திரைபோற் கிடப்பவனை விழித்தெழச் செய்தல் முடியுமா?

நாங்கள் அறிந்த வரையில் வண்ணார்பண்ணைக் காகிதநிலயத்தின் மாச வருவாய் 1500 வரையிலிருக்குமென்றும் செலவு ரூபா 500 வரையிலிருக்குமென்றும் ஆகிக்கக் கிடக்கின்றது. இந்த மதிப்பில் ஏதும் பிழைபிருந்தால் கடிதப் பகுதித் தலையர் இதன் கிட்டு ஆராய்ந்து நாம் மதித்த தொகையைத் திருந்தி வெளியிடுவாராக. இப்படிச் செலவைக் காட்டிலும் இருமடங்கு வருவாய் மாசந்தோறும் வரும் இத்தானபத்தில், இங்குள்ளார் குறித்த நேரம் முழுவதும், (அதாவது இடையிலே ஒருமணி நேரம் பூட்டப்படுதலின்றி, வந்து வந்து சருகும் ஆற்றுதற்காயிய வசதிகளை மேலதிகாரிகள் உடனே செய்தலவைக்க வொணணுதாரமதாகுமான மொத்திற பெருந்நுவானான மக்கள் இந்தக் கடிதத்தானத்தில் நின்று நம் சருகுத்தை காலதாமத மின்றிச் செய்து முடித்துவிட்டுப் போதற்கியலாத தயங்குவதை நாம் கேரிற் பார்த்துள்ளோம்; நிலயத் தலைவரும் "ஊருக்கென்றொரு தாரி ஆருக்கென்றுவாய்" என்ற நிலைமையில் நிற்கின்றாரே. முந்திமுன்று உதவி யுத்தியோகத்தரும் ஒரு தலைமையுத்தியோகத்தரும் இருந்து சருகும் பார்த்த இத்தானத்தில் இப்பொழுது "லோக்கல் அஸிஸ்ரன்ற்" என்று சொல்லப்படும் உள்ளூர் உதவி யுத்தியோகத்தரொருவரையாயினும் நாற்பது சாற்றுபதைக்கு ரூபா வேதனங் கொடுத்து நியமித்துவிட்டால் இந்தக் காகித நிலயம் இடைநேரத்தில் ஒருமணித்தியாலம் பூட்டப்படுதலின்றி எவரும் வந்து சருகும் பார்த்தற்கு வசதியானதானமாக விருக்குமே. 500 ரூபா செலவிற்கு 1000 ரூபா இலாபம் போதாதா? பொருள்வருவாய் அதிகமுள்ள தானத்திலே செலவுச் சுருக்கஞ் செய்து ஊரவர்களை இடர்ப்படுத்த வேண்டிய நியாயமில்லையே; காகித நிலயம் முதலிய பிரசித்த தானங்கள் இருப்பது ஊரவர்களின் வசதியை விட்டல்லாமல், இப்படியான தானங்களின் வசதியை விட்டு ஊரவர்கள் நடந்து கொள்ளுதல் முடியாதென்பதை மேலதிகாரிகளுக்கு விபத்துடன் தெரிவிக்கின்றோம். ஆதலால் வண்ணார்பண்ணைக் காகித நிலயத்தில் இப்பொழுது சேர்ந்திருக்கும் வசதிக் குறைவுகளை இன்றே அகற்றச் செய்யும்படி, காகிதப்பகுதித் தலையர், போக்குவரத்துப் பகுதி மந்திரியார், எங்கள் யாழ்ப்பாணப்பகுதிச் சனப் பிரதிநிதியாகவுள்ள மூவருக்கும் முறையிடுகின்றோம். அவர்கள் இம்முறையீட்டைச் திருத்த ஆகவேண்டியவற்றை விரைவிற் செய்வரென இங்குள்ள மக்கள் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள்.

உலகம் பலவிதக் கதை

(முறைதொடர்)

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

"என் மகளை, நீ இறுகிறிற்சொன்னதொன்று எனக்கு விளங்கவில்லையே. யம்மா; நீ இருக்க உன் தங்கையின் கருமத்தையும், நீங்கள் பெண்பிள்ளைகள் பெரிய பெண்களாக இருக்கும்போது உங்கள் அண்ணன் கருமத்தையும் பார்க்கவேண்டுமென்றிருப்பேன். அப்படிதான் செய்தாலும் உலகம் ஒப்புக்கொள்ளுமா? ஏனடியம்மா அப்படிச் சொல்லி என்னை வருத்துகிறாய்! அந்தப்பிள்ளை சந்திக்காவிட்டால், வேறெங்கேனும் பேசி பொழுக்குபண்ணுவதானால் முளை, அதை விட்டு இப்படியான எண்ணம் கொள்ளாதே யடியேன் கண்மே" என்று சின்னம்மாள் சிந்தை வருக்க கண்களில் நீர் தழும்ப இதமாகத் தன் மகளுக்குச் சொன்னாள். 'அம்மா, ஒன்று மறியாமலிருக்க எனக்கு அவர் நம்முடைய நோக்கத்தை எக்கண் அண்ணன்மூலமாகத் தெரிவித்துத் தாரும் என்னிடத்தில் அதிக விசுவாசம் வைத்து நடந்தார்; நானும் அப்படியே நம்பி நடந்துவருகிறேன்; என் பெல்லாவிதியில் அவருடைய மனம் மாறுபட்டாலும், கன்விலைகொண்டிருக்கும் மான் காலத்திலுக்குக் காலம் மனம் மாறினும், பெண்களுக்குரிய பிரதான ஒழுக்கமாகிய கற்பென்பது எப்படியம்மா கிலை கிற்கும்; அவர் என்னைக் கல்யாணஞ் செய்யாமல் விட்டாலும்; என்னிப் புறக்கணிக்கலாம்; வேறொரு மங்கையை அவர் மணஞ் செய்யலாம்; ஆனால் என்னை அவர் தம்மையல்லாத இன்னொருவருக்கு மனைவியாக்க முடியுமா? ஏதோ தெய்வத்திற்குச் சம்மதமாருந்தால் தான் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாவேன்; இல்லையேல் இல்லையும்மா" என்று மனவுவாக்கியத்துடன் கருலேசுவரிசொன்னாள். கேட்ட தாய் முன்னைவரக் காட்டிலும் அதிகம் மனம் வருந்தினாள். 'மகளே, உன் வார்த்தைகளைக் கேட்க என் தலை விறைக்கிறது; மனம் ஏங்குகிறது; ஆ! தெய்வமே! இதுவும் உன்னோடனேயா? நான் கைம்பெண், ஆருமற்றவள், என்பிள்ளைகளோ ஒன்றுமறியச் சிறுவர்; உன்னுடையதருமையால், வறுமைமிகு சோமையாக என் மக்கள் வளர்த்து வருகிறேன், இந்நேரத்தில் இப்படி யெனநீச் சோதிக்கத் தலைப்பட்டால் ஆண்டவனே, நான் என்னசெய்வேன்" என்று சின்னம்மள் தன்னளவிற் கலங்கினாள். தன்னோப் பெற்றவள் வருந்துவதைக் கண்டு மகள் தானும் வருத்தப்பட்டு, "அம்மா, நீங்கள் கவலைப்படவேண்டாம்; இப்போது என்ன முற்றைக் கண்டீன; நானோக்கு எது நடக்குமோ அதை நாம் இன்றைக்கு அறியமாட்டோம்; நாங்கள் கைபெடுக்குந் தெய்வம் எங்களைக் கைவிடாதம்மா; பிறகு நடப்பது என்னவென்பதை ஒரு கிமிஷத்திற்கு முந்தியானும் அறியக்கூடிய ஆற்றலிலாத சின்னப் பல்லினிச் சிறறறிவுடைய மனுஷர்களாகிய எங்களுக்கு என்ன அம்மா தெரியும்! எல்லாம் ஆண்டவன் செயலாகும்; அவனுடைய நிருவகுமே எங்களுக்கு வேண்டும்; அவனை அன்புடன் பிரார்த்தனை செய்வது எங்கள் கடன்; நடவுள் நம்மிடுகை கைவிடப்படார் தாயே" என்று கருலேசுவரி தாய்க்குத் தேறுதல் கூறினாள்.

"காலத்திற் கேற்ற கோலம்"

"மகளே நீ சொல்வதும் சரிதான்; ஆனால் பெண்களுடைய நெறியென்பது அந்தக் காலத்திலே இருந்தது மெய்தான்; முற்காலத்திலே பெண்களுக்குச் சொல்லப்பட்ட கற்புநெறியை இதுக் காலத்தில் அவ்வளவு அப்படியாகப் பார்த்து நடக்கமுடியாது; காலத்துக்குத் தக்க கோலமென்று நடக்க வேண்டியே முற்காலத்திலே ஒரு பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளையை நிச்சயம் பண்ணினார்களாம், ஏதோ ஒருகிய யத்தினால் அந்தச் சம்பந்தம் தவறிவிட்டால், அப்பெண் வேறு விவாகஞ் செய்யாமல் இருந்து தன் காலத்தைக் கழித்து வருமாம்—என் மகளே; ஆனால் இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் பார்க்கமுடியாது மகளே; ஒரு மாப்பிள்ளைக்கு நாலு பெண்களை கல்யாணம் பேசுவதும், ஒரு பெண்ணுக்கு நாலு மாப்பிள்ளையைப் பேசுவதும் சகசமாய் விட்டன; இந்த வாட்களில் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் கல்யாணம் முடிந்தபிறகே, இல்லையேல் கல்யாணப் பதிவு செய்துமிறகே தான் அவர்கள் முகத்தை மனைவி பெண்டாடி நிச்சயமாகும். ஒழுக்கமான பெண்கள் செய்யக்கூடியது ஒன்று மாத்திரமுண்டு; என்னவென்றால் ஒரு பெண் தன் புருஷன் இறந்தாலோ, அவள் எவ்வளவு இளம் பெண்ணாயிருந்தாலும் இரண்டாமுறை கல்யாணஞ் செய்யாதிருப்பதுதான் நெறியாகும் ஆனாலும் என் மகளே, நீ இப்பொழுதும் கன்னிகையாகவே இருக்கின்றாய்; உக்குப் பேய்த்தனமான எண்ணங்களே விட்டுவிடு; பழைய புத்தகங்களைப் படித்து விட்டு என்று சங்கட்படாதேயடி என் கண்மணி" என்று தாய் பெரிதும்பிரிய பேசினாள்.

"கற்புக்குக் காலதேபமில்லை"

"அம்மா, உங்கள் வாக்கு என் தலை மேலாக, இவள் நிறியவள், பெற்ற தாய்க்குப் புத்திசொல்லப் புறப்பட்டுவிட்டாளே பெண்ணு என்கிக் கோபங்கொள்ளாதீர்கள்; என்சொல்லை மதியுங்கோ மெல்ல மெல்ல கேட்டு மெழுக்கியபடி யுங்கள்; பழைய நாவல்களைப் படித்தேனென்று என்கிக் குறை கூறுகின்றீர்கள் அம்மா; பெண்களுடைய கற்பொன்றுமுக்கம் அக்காலத்திலென்று இக்காலத்திலென்றோன்று என்று எண்ணுவது தப்பம்மா; அந்தக் காலத்திலும் நெறிகளுக்கு பெண்கள் இருந்தார்கள்; இந்நாக்காலத்திலும் கற்பொழுக்கமுடையப் பெண்கள் இருக்கின்றார்கள் தாயே. அக்காலத்தில் ஆள்வர்களெல்லாரும் கற்புநெறி தவறுதவர்களாயிருந்தால், அருந்தவி, சந்திரவதி, தமயந்தி, நாளாயினி, சாரதி, சாவித்திரியென்று அக்காலத்தில் விளங்கிய கற்புமட மகளினால் இப்பொழுதுள்ள நாங்கள் பாராட்டிப் பேசுவதற்கு நியாயமென்ன? பூர்வத்திலிருந்த மாதரெல்லாரும் கற்புடையவர்களாக விருந்தால் குறித்த அந்தச் சில பெண்களுடைய பெயர்களே மாத்திரம் உலகம் எடுத்துப் பாராட்டமாட்டாதே; பிற்காலத்திலும் பதுமினி அளகாவலி முதலாம் மகளிர்கள் தம் நெறி தம்பாமிருந்தனரென்று சாற்றிய ரங்கள் கூறும்; தம் மானத்தைக் காக்கும்படி உயிரையிட்ட பெண்கள் எங்கள் காட்டிலும் பாரதகாலத்திலும் பலருண்டென்று படித்து வருகிறோம்; இக் காலத்திலும் இல்லையாகாய்போம் கற்புள்ள பெண்கள் பலர் இருக்கின்றார்கள்; ஆனால் நெறிதவறு மகளிர் ஒரு காலத்திலே தான் இருந்தார், பின் னொருகாலத்திலே இல்லாதொழிந்தார் என்று நினைத்து நாங்கள் கடப்பது தவறுகும் அம்மா; கற்புநெறி பெண்களாயப் எங்களுடைய மனநிலையைப் பொறுத்ததேயல்லாமற் காலத்தைப் பொறுத்ததல்ல, அம்மா, கற்புக்குக் காலதேபமில்லை; அவர் என்மீது உண்மையான விசுவாசமும் அன்பும் வைத்து கடக்கிறாரென்பதைக் கண்டு நானும் அவரையே எனக்குத் தலைவராக மனதில் வரித்திருக்கிறேன்; அவருடைய மனம் மாறுகின்றதென்று கிறைந்து என்னுள்ளம் மாறுபடுதல் முடியாதம்மா! ஆனதால் என்னைப் பாடுபட்டுப் பெற்றவளர்த்த அருமை யான அம்மா, இந்த ஒரு கருமத்தி லாவது என்னெண்ணப்படி செய்ய எனக்கு அநுமதி தாருங்கள்; கலவிப் பயிற்சியை; பெற்றதாய் மனம் வருந்தினாற் பின்னை நல்லாயிருத்தல் முடியாதம்மா; இப்பொழுதுதான் நாங்கள் என்ன முடிவைக் கண்டோம்; எங்கள் தகப்பனார் இப்பொழுதிலிருப்பேனாலாவற்றிற்கும் பரமபிதா இருக்கின்றார்; அதுப் பரமபிதா எங்களை ஒருபோதுங் கைவிடமாட்டாம்மா; ஆனதால், அம்மா, நீங்கள் கலவிப்படவேண்டாம்" என்று கருலேசுவரி கண்களில் நீர்சிந்த, தாயின் மனம் அலைபட்ட மெழுகு போலக் கரைய ஆதுதல் கூறினாள். மகளுடைய வார்த்தைகளைக் கேட்டுச் சின்னம்மாள் ஒருவாறு மனம் அறிகிறாள்; இதற்கிடையிற் குமாரசுவாமியும் அங்கே வருதலும், தாய் தன் மகளின் செய்தியை அவளிடஞ் சொல்ல' அவள் "அம்மா, நான்கூசாசியோடு இந்நேரத்தில் எவ்வகையான நியாயமும் பேசாதீகள்; என் தங்கை பெரிலோ மனம் உடைந்திருக்கிறாள்; எங்களிடைக்காட்டிலும் அவள் கடிய அறிவுள்ளவள்; அதுக் கிவளிக், தெய்வத்தில் நம்பிக்கை வைத்தவள்; தங்கைச்சியின் எண்ணத்தை நிறுத்மாருக ஏதும் கடக்கக் கூடியன் விடாமாட்டாம்மா; எங்களுக்கு எவ்வகையான கேடும் வரமாட்டாதம்மா, நாங்கள் எவர்க்காகினும் நீமை செய்தறியோம்; இன்னமும் தெய்வத்தையே வேண்டுவோம்..." என்று தாய்க்குத் தேறுதல் சொன்னாள். 'அம்மா, நான்கூசாசியோடு இந்நேரத்தில் எவ்வகையான நியாயமும் பேசாதீகள்; என் தங்கைப

திருக்கோவையாரின் உவமைச் சிறப்புக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான பகுதிகளெவ்வெல்லாம் உச்சியை அடைந்து விடுவர் என்ப.) தலைவனது மலையின் உச்சியிலுள்ள தேன்கூட்டில் தேன் நிரம்பியதை அத்தேன்கூட்டின்மேல் எழுந்து ஆரவாரஞ்செய்யும் சுக்கங்கொண்டு உணர்ந்து குன்றவர் அதன் தேனையெடுப்பதற்காகக் கண்ணெனி அமைக்கின்றனரென்று தோழி கூறிவரும் வார்த்தைகளுள்ளே "உனக்கும் உன்னும் காதலிக்கப்படும் தலைவிக்குமிடையே நிகழும் கனவொழுக்கத்தை எம் சுற்றத்தவர் சில குறிப்புக்களால் உணர்ந்து உன் காதலியை மணஞ் செய்து கொடுக்க எத்தனிக்கின்றனர். ஆதலால், நீ அவளை மிக விரைவில் மணந்து கொள்ளுதல் வேண்டும்" என்னும் குறிப்புப் பொருள் அடங்கியிருத்தல் காண்க. இவ்வாறு கூறுவதையே உள்ளுறையுவமம் என்பர். என்ன கருக்கொண்டு, என்ன அழகாக, என்ன அழகாக இக்க உவமம் கூறப்பட்டிருக்கின்றது என்று பாருங்கள்!

இன்னும் ஒருவிருந்தனாந்தலின்கண்ணே, அலரெழுந்து விடாது, அவ்வரைவுக்கட் சில நாள் ஒருவழிப் பிரிந்துறைந்து திருமணியை நெஞ்சுகள் நிறைபுறமாக, தோழி அவளைச் சென்று எதிர்ப்பட்டு வணஞ்செய்து நின்று, "கிளம்பா! வெள்ளிய பெரிய மதியின்றன்னிறமுஞ் சடைமா னியன்ற முடியையுடையவனது புனிதனாகிய ஒன்னுதல் தன் மேனி முழுதும் பசலையினாலே; அமலிக்கண் மிழா நிற்கின்றாள்; எழாநிற்கின்றாள்; விம்மா நிற்கின்றாள். அதனால் இன்ன நிலைமையள் என்று சொல்லப்படாது" என்று வரைவுதோன்றத் தலைவியின் வருத்தமிருதி கூறுகின்றாள். பாட்டைப் படிப்போமாக.

வளரும் கறியர் மாநத் தின்றாம் மாக்கிடமாய்த்
தளருந் தடவரைத் தண்சிலம் பாநன தங்கொங்கைப்
பிளரும் பிழுமெழும் பிம்மும் பெலியும்பெண் ணாமிதுகொல்(று)
ஒளிகுட்டஞ்சுடிமு யோர்புல் பூரன் ஒன்னுதலே

(செய். 193)

சொற்களின் ஒழுக்கத்தைப் பாருங்கள்! 'கிளரும்; விழும்; எழும்;விம்மும்; பெலியும்'என்பனவற்றை அவதானியுங்கள்! வருத்தமிகுதியை இன்னுஞ் சுருக்கமாக இத்தனை அழகாகத் தன்மை மகிழ்ந்தோன்றக் கூறமுடியுமா என்று சிந்தியுங்கள்! இங்ஙனம் தலைவி வருத்தறுதற்குரிய காரணத்தையுங் கூறுகின்றாள், "வளரா நின்ற மினரு கொடியைத் தமக்கேற்ற வுணவென்று, அறியாத இயைமந்தி நின்று வருத்தற்றிற் கிடமாய் நிலைதளரும் பெரிய வரைகளையுடைய மலைபா!" என்று விளிப்பதால் வளரும் இளங்கற் கண்ணிற் கிளிகளிருந்தலின் இது நாக்குத் துய்க்கப்படாது என்றவாறாத இளமந்தி அதனைத்தின்று வருத்துமாறுபோலக் கண்ணும் மனமும் மகிழும் உருவிலேயுமல்ல உன்னை உன் பெருமையுணராமல் எதிர்ப்பட்டு வருந்தா நின்றாள்" என்று குறிப்பாக எட்டுவது காண்க. இவ்வள்ளுறை யுவமம் மிக அழகாகவும் ஒரேவழி கைச்சுவை பயப்பதாகவும் தலைவி வருத்தத்தைக் காதலாமலைபோற காட்டுவதாகவும் விளங்குகின்றதன்றோ! இத்தகைய உள்ளுறை யுவமங்கள் பல இந்நூலிற் காணப்படுகின்றன. அங்ஙனம் உள்ளுறை யுவமங்கள் வரும் பகுதிகளிற் சில வருமாறு:—

(1) "தண்வி ரவிசந்த முந்தத் தநடப் பிரமுப்புத்
தெண்வி நறவுந் திசைதொட பாவு மலைச்சிலம்பா!"
(செய். 128)*

(2) "வேய்நந்த வெண்முந்தத் சிந்துவாய் கார்வரை மீன்பரம்பிச்
சேய்நந்த வானம் மாறுந் சிலம்ப!"
(செய். 130)

(3) "எழுங்குல வாறையின் இங்கவி நின்றிள மந்தியந்தண்
செழுங்குல வாறை நிறுமிற் றுயில் சிலம்பா!"
(செய். 250)

(4) "சிறுகவண் வாய்ந்த மணியிற் சிறைபெருந் தேனிழுமென்(று)
இறுங்கற் றுற்றெத் சிறுகுடி ஞந்தும் இடமிறு"
(செய். 252)

(5) "கனிறற்ற செல்லல் கனவயிற் பெண்ணாய் கைஞ்ஞெமிர்த்துப்
பிறிற்ற வானம் பெருவரை நாட!"
(செய். 254)

(6) "இறவரை யுற்பாக் கடவுட் பராய்நின் றெறிலியுள்ளிக்
குறவரை யாக்குங் குளிவரை நாட!"
(செய். 260)

(7) "பையாக் கதல் வளந்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தவிர்நின் மந்திகள் சோறும் இருக்கிலம்பா!"
(செய். 262)

(8) "வாரிக் கலிந்தின் மருப்பு முந்தம் வரைமகளிர்
வேரிக் கலிந்தும் விழுமின் நாட!"
(செய். 265)

(9) "வந்தாய் பவரையிற் வாயில் முட்டை இனையமந்தி
பந்தா டிரும்பொற்றி பவளா நாடன்"
(செய். 276)

(10) "நன்பெடை நைவந் நவலந் தன்னைக் சாஞ்சாலந்தின்
வன்பெடை பேற்றாலி துவய ஞாள"
(செய். 377)

6. இனி, எட்டுத் தொகையைச் சேர்ந்த குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை, நற்றிணை முதலியவற்றிற் காணப்படும் உவமைகளிற் பலவும் இந்நூலட் காணப்படுகின்றன. அவற்றுள் சான்றைக்கு ஒருசிலவற்றைக் காட்டுதும். நெய்யுந்தை மகிழ்நன் என்னும் துறையில்,

வலையில் நெற்கடல் நின்றிட மேன்கடல் வானகத்தின்
தலைவழி சேர்கழி சோத்தெனத் நிலைக்கொல் சொன்னகயிலைக்
கிலையின் சீக்கிக் கொண்டையைக் கண்ணியைக் கொண்டுதந்த
விலையைவிலை வாங்கிய வேன்கடை வேன்தெய்ய மிக்கனவே
(செய். ௯)

என மறுவி வலையைத் தலைவன் பராட்டுகின்றான். அது காண் அவன்கூறும் உவமமாயம் எத்துணைச் சிறப்பாக இருக்கின்றது பாருங்கள்! இதனோடு,

"பரயும் ஞாயும் யாரா யெரோ
எக்தையும் நுக்தையும் எமமுறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயரீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

என்னும் குறுந்தொகை (40)ச் செய்யுட் கருத்து ஒப்புநோக்கி இன்புறத் தக்கதன்றோ! அன்றியும், இச்செய்யுளின் முதலிரண்டடியின் கருத்தைத் திருத்தக்க தேவரும் பொன்னேபோற் போற்றத் தாம்படியதொரமாணியுமாகுமதிலிலம்பகத்தில் (செய்.161)

பரவை வெண்டிரை வடகடற் படுநகத் தனியுட், டிலை செய் தென்ட விட்டோர் சோன்கழி வெனி, அரசி அத்துணை பகலிற் றெற்றென"

என்று எடுத்தான்கருத்தின் காணலாம். —(வரும்)

பிரிட்டிஷ் கடற்படைப் பலம்

இழந்த யுத்தக்கப்பல்களுக்குப் புதிய கப்பல்கள்

லண்டன் செப் 20

